சுற்றுநிருபம் : **05/2016**

கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு
வடக்கு மாகாண சபை,
18/9 வைமன் வீதி,
நல்லூர்.
2016.07.20

வட மாகாணத்திலுள்ள சகல கூட்டுறவு நிறுவனங்களின் தலைவர்களுக்கும்

**கூட்டுறவுச் சங்கங்களை அபிவிருத்தி செய்வதற்கான 100 நாள் வேலைத்திட்டத்தில் தற்காலிக முகாமைமட்டப் பணியாளர்களை நிரந்தரமாக்கலுக்காக விண்ணப்பிக்கும் போது கவனத்திலெடுக்க வேண்டிய விடயங்களும் நிபந்தனைகளும்**

1. தெரிவு செய்யப்படும் பணியாளர் சேவைக்காலத்தில் ஒழுக்கம், நன்நடத்தைக்குரிய பணியாளர் என்பதனை நெறியாளர் குழு உறுதிப்படுத்துதல் வேண்டும்.

2. ஏற்கனவே நிரந்தரப்பதவிக்கான பதவி நிர்ணய அங்கீகாரம் பெற்றிருத்தல் வேண்டும்.

3. குறித்த விண்ணப்பிக்கும் பதவிகளில் தற்காலிகமாக ஐந்து ஆண்டுகள் கடமையாற்றியிருத்தல் வேண்டும்.

4. குறித்த சங்கத்தில் குறித்த பதவிகளுக்கான தகைமையுள்ள வேறு பணியாளர்கள் சேவையில் இல்லை என்பதை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

5. நெறியாளர் குழுவால் தெரிவு செய்யப்படுபவர்கள் அழைக்கப்படும் போது கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் நேர்முகம் ஒன்றுக்கு வருகை தருதல் வேண்டும்.

6. கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் அனுமதி கிடைத்ததன் பின்னர் கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் கூட்டுறவு பயிற்சி நிறுவனத்தினால் நடாத்தப்படும் 06 மாத காலம் கொண்ட கூட்டுறவுப் பணியாளர் சாதாரண பிரிவு பயிற்சி நெறி ஒன்றை நிறைவு செய்ததன் பிற்பாடே நிரந்தரப் பதவி நிர்ணயம் செய்யப்படும்.

7. இப் பயிற்சிக்கான பாடத்திட்டம்
   I. கணக்கியல் - I
   II. கணக்கியல் - II
   III. முகாமையியல்
   IV. வர்த்தகவியல்
   V. கூட்டுறவியல்

VI. கூட்டுறவுச் சட்டம்
VII. இணைபாடம் ஆங்கிலம்
VIII. கணனி

8. வெற்றிகரமாக பயிற்சியை நிறைவு செய்ததன் பின்னரான நிரந்தர பதவி நிர்ணயத்தின் போது இரண்டு வருட தகுதிகாண் காலம் நிர்ணயிக்கப்படும். வெற்றிகரமாக பயிற்சியை நிறைவு செய்த பயன் விளைவுத் திகதி நிரந்தர பதவி நிர்ணயத் திகதியாகக் கொள்ளப்படும்.

9. தகுதிகாண் காலத்தில் கூட்டுறவுப் பணியாளர் உயர் தராதரப்பத்திரக் கற்கை நெறியினை பூர்த்தி செய்தல் வேண்டும்.

2016.07.20 ந் திகதிய ஆணைக்குழுத் தீர்மானப்படி.

பொ.வாகீசன்
செயலாளர்

பொ.வாகீசன்
செயலாளர்
கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு
வடக்கு மாகாணசபை

பிரதி : 1.கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், பதவிவாளரும் வட மாகாணம்.

2.வட மாகாணத்திலுள்ள சகல கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்களுக்கும்